## Masa Depan Penjagaan Kesihatan

Penduduk Singapura yang semakin tua akan meningkatkan permintaan terhadap penjagaan kesihatan. Oleh itu, membangunkan satu sistem yang boleh bertahan adalah penting. NEHR semakin perlu dilaksanakan kerana sistem penjagaan kesihatan bukan sahaja melibatkan hospital tetapi juga penyedia khidmat yang lain di seluruh negara.

Sistem seperti ini adalah perlu untuk menyediakan perkhidmatan penjagaan kesihatan pada tahap yang sewajarnya, meningkatkan piawaian pengurusan penyakit kronik dan memberi peluang kepada pesakit untuk menjaga kesihatan mereka secara proaktif.

Sementara EMRX telah membolehkan pertukaran beberapa maklumat perubatan di antara institusi penjagaan kesihatan awam, NEHR merupakan sebuah sistem yang lebih kukuh yang diasaskan daripada sistem yang sedia ada dan boleh dikembangkan melebihi liputan penyedia perkhidmatan yang sedia ada.

NEHR menyaring dan menggabungkan maklumat klinikal yang relevan bagi seseorang pesakit menjadi satu rekod setiap kali rekod individu tersebut dimasukkan ke dalam sistem penjagaan kesihatan awam dan privet di sepanjang kehidupannya. Ia membolehkan penyedia khidmat penjagaan kesihatan anda yang sah untuk mengakses rekod anda untuk membolehkan mereka memberikan anda penjagaan yang terbaik.

Dengan ini, anda boleh menikmati proses rawatan yang lebih lancar sementara pasukan penjagaan kesihatan anda boleh membuat keputusan klinikal yang lebih tepat melalui NEHR.

## Bagaimanakah saya mendapat manfaat daripada NEHR?

NEHR akan membolehkan pesakit untuk menjalani rawatan yang selamat dan bermutu dengan mendapatkan:

- Maklumat klinikal yang tepat pada masanya dan dikemas kini pada masa pemeriksaan supaya keputusan klinikal yang penting dapat dilakukan dan rawatan yang sewajarnya dapat diberikan dengan segera.
- Karyawan penjagaan kesihatan yang sah boleh mengakses maklumat lengkap mengenai keadaan dan senarai ubat pesakit. Cara ini akan mengurangkan atau mengelakkan rawatan dan ujian yang tidak diperlukan serta dapat mengurangkan perbelanjaan rawatan pesakit tersebut.







## Apakah maklumat perubatan yang dikongsi?

NEHR akan dilaksanakan dalam beberapa fasa.

Berikut ialah jenis maklumat pesakit yang ada di dalam fasa 1 NEHR:

1. Sejarah kemasukan dan janji temu
2. Ringkasan rawatan di hospital
3. Laporan makmal
4. Laporan radiologi
5. Sejarah perubatan
6. Sejarah pembedahan
7. Alahan dan ubat yang tidak serasi
8. Pengimunan semasa kanak-kanak

## Bagaimanakah rekod perubatan saya disimpan dengan selamat?

Hanya doktor dan staf penjagaan kesihatan yang terlibat dengan rawatan anda akan diberikan akses kepada NEHR anda. Semua akses kepada NEHR anda oleh doktor dan staf penjagaan kesihatan akan dicatatkan dan diperiksa secara berkala.

Semua karyawan penjagaan kesihatan juga diikat dengan undang-undang dan etika profesional supaya maklumat perubatan anda akan kekal rahsia. Akses tanpa izin kepada rekod kesihatan elektronik merupakan satu kesalahan di bawah seksyen 3(1) Akta Penyalahgunaan Komputer, Akta 50A. Di bawah akta ini, institusi penjagaan kesihatan dianggap sebagai sebuah “komputer yang dilindungi”. Hukuman lanjutan yang dikenakan bagi kesalahan di bawah seksyen 9 akta tersebut ialah denda tidak melebihi $100,000 dan/atau penjara sehingga 20 tahun bagi akses tanpa izin pada data anda.

## Untuk maklumat lanjut

Sejajar dengan visi Pemerintah “Seorang Pesakit, Satu Rekod”, anda tidak perlu melakukan apa-apa untuk menikmati faedah sistem yang baru ini. Manfaat sistem ini ialah pemberian ubat yang lebih baik, mengurangkan masa menunggu dan pengurusan mutu dan kos penjagaan kesihatan yang lebih baik dengan memastikan pesakit tersebut menerima rawatan yang paling sesuai bagi keadaannya.

Namun, jika anda memilih untuk dikecualikan daripada NEHR, sila beritahu salah sebuah daripada penyedia penjagaan kesihatan atau staf perkhidmatan kami. Mereka akan merujukkan anda kepada kaunselor kami yang akan menjelaskan kepada anda dengan lebih lanjut mengenai NEHR dan pilihan yang boleh anda buat. Adalah penting untuk anda ketahui bahawa anda tidak akan dapat menikmati manfaat tersebut jika anda tidak menyertai sistem ini.

---

Institusi-institusi kesihatan menyediakan latihan untok generasi akan datang para doctor, jururawat dan karyawan kesihatan. Oleh itu, mungkin terdapat keperluan untuk melihat rekod perubatan bagi tujuan latihan. Tetapi sesiapa yang melihat rekod tersebut adalah tertakluk di bawah undang-undang agar tidak mendedahkan maklumat tersebut kepada sesiapa. Kerahsiaan dan privasi pesakit adalah dihormati semasa latihan perubatan.

MINISTRY OF HEALTH
SINGAPORE

# தேசிய மின்னியல் சுகாதாரப் பதிவேடு (NEHR)

2004 முதல், சில பொதுச் சுகாதாரப் பராமரிப்புக் கழகங்கள் நோயாளிகளின் மருத்துவப் பதிவேடுகளைத் தங்களுக்கு இடையில் பார்வையிடுவதற்கு மின்னியல் மருத்துவப் பதிவேடு பரிமாற்ற முறையை (EMRX) பயன்படுத்தி வருகின்றன.

வெவ்வேறு சுகாதாரப் பராமரிப்புக் கழகங்களுக்கு இடையில் நோயாளிகள் மாறிச்செல்கையில் மருத்துவத் தகவல்களின் தடங்கலற்ற பரிமாற்றத்திற்குத் துணையாக, தனிநபரை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த சுகாதாரப் பராமரிப்பு பதிவேட்டு முறையான தேசிய மின்னியல் சுகாதாரப் பதிவேடு (NEHR) அமைக்கப்படும் என்று 2009ல் அரசாங்கம் அறிவித்தது.

நோயாளிகள் சிரமமற்ற சுகாதாரப் பராமரிப்பையும் உயர்தரக் கவனிப்பையும் பெற்று, அதே சோதனைகளைத் திரும்பத் திரும்பச் செய்வதை அல்லது தேவையற்ற சோதனைகளைக் குறைத்து, மருந்துகளில் நேரும் பிழைகளையும் விபரீத மருந்து பாதிப்புகளையும் குறைப்பதே இத்தகைய முறையின் இலக்காகும்.

2012 ஜூன் மாதத்திற்குள், அனைத்து பொது சுகாதாரப் பராமரிப்பு கழகங்களும், தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக மருத்துவமனைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவர்களும் NEHR முறையில் இடம்பெறுவார்கள்.



## சுகாதாரப் பராமரிப்பின் வருங்காலம்

சிங்கப்பூரின் மூப்படையும் மக்கள் தொகையால் சுகாதாரப் பராமரிப்பிற்கான தேவைகள் அதிகரிக்கும். இந்நிலையைத் தாக்குப்பிடிப்பது முக்கியம். தீவிர சிகிச்சை மருத்துவமனைகளுக்கு அப்பால் சமூக மருத்துவக் கழகங்களையும் உள்ளடக்கும் சுகாதாரப் பராமரிப்பு முறையை ஒருங்கிணைப்பதற்கு NEHR தேவைப்படுகிறது.

சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளைப் பொருத்தமான நிலையில் வழங்கி, தீராத நோய்களின் கட்டுப்பாட்டுத் தரத்தை உயர்த்தி, நோயாளிகள் தங்கள் உடல்நலனுக்கு முனைப்புடன் பொறுப்பேற்பதற்கு இது அவசியமாகிறது.

பொது சுகாதாரப் பராமரிப்பு கழகங்களுக்கு இடையில் மருத்துவத் தகவல் பரிமாற்றம் ஓரளவு நடைபெற EMRX முறை துணை புரிந்தாலும், நடப்பிலுள்ள முறையை மேம்படுத்தி, தற்போதைய மருத்துவக் கழகங்களுக்கு அப்பால் நீட்டிப்பதற்கு வழிவகுக்கும் மேலும் உறுதியான செயல்முறையாக NEHR விளங்குகிறது.

பொது மற்றும் தனியார் சுகாதாரப் பராமரிப்பு கழகங்களில் நோயாளிகளின் வாழ்நாள் முழுவதும் பதிவாகியிருக்கும் பொருத்தமான மருத்துவ விவரங்களை NEHR முறை எடுத்து ஒரே பதிவேட்டில் ஒருங்கிணைக்கிறது. அதிகாரம்பெற்ற சுகாதாரப் பராமரிப்புச் சேவை வழங்குபவர்கள், தொடர்ப் பராமரிப்பு வழங்கும் நோக்கத்துடன், உங்கள் பதிவேட்டைப் பார்வையிட்டு மேம்பட்ட பராமரிப்பு வழங்கிட இது வகை செய்கிறது.

அதாவது, NEHR முறை உங்களுக்குக் கூடுதல் சௌகரியத்தை ஏற்படுத்துவதோடு, உங்களது சுகாதாரப் பராமரிப்புக் குழுவினர் மேலும் துல்லியமான மருத்துவத் தீர்மானங்கள் எடுக்க முடியும்.

## NEHR எனக்கு எவ்வாறு பலனளிக்கும்?

நோயாளிகள் பாதுகாப்பான, தரமான பராமரிப்பைப் பெற்றிட NEHR முறை பின்வரும் வழிகளில் துணை புரியும்:

- பராமரிப்பு வழங்கப்படும்போது விரைவாக ஆகக்கடைசி மருத்துவ விவரங்களை வழங்கும். இதன்வழி முக்கியமான மருத்துவத் தீர்மானங்கள் எடுத்து, சிகிச்சை தாமதமடைவதைத் தவிர்க்கமுடியும்
- அதிகாரம்பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வல்லுநர்களுக்கு நோயாளியின் உடல்நிலை மற்றும் மருந்துப் பட்டியலின் முழு விவரம் கிடைக்கும். இதன்வழி, தேவையற்ற சிகிச்சைகள், பரிசோதனைகள், விபரீத நிகழ்வுகள் ஆகியவற்றைக் குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாம். இவ்வாறாக, நோயாளியின் சுகாதாரப் பராமரிப்புச் செலவுகளும் குறையும்







## எந்தெந்த மருத்துவ விவரங்கள் பகிர்ந்துகொள்ளப்படும்?

NEHR முறை கட்டம் கட்டமாக அமலாக்கப்படும்.

NEHR முறையின் முதல் கட்டத்தில் கிடைக்கும் நோயாளியின் தகவல் வகைகள் கீழே இடம்பெறுகின்றன:

1 மருத்துவமனையில் சேர்ப்பு மற்றும் வருகையளிப்பு வரலாறு
2 மருத்துவமனை உள்நோயாளி வீடு திரும்பிய விவரச்சுருக்கங்கள்
3 ஆராய்ச்சிக்கூடச் சோதனைகளின் முடிவுகள்
4 கதிரியக்கச் சோதனையின் முடிவுகள்
5 மருந்து வரலாறு
6 அறுவை சிகிச்சை வரலாறு
7 ஒவ்வாமைகள் மற்றும் மருந்துகளால் நேர்ந்த விபரீத விளைவுகள்
8 குழந்தைப் பருவத்தில் போடப்பட்ட தடுப்பூசிகள்

## எனது மருத்துவப் பதிவேடுகள் எப்படி பாதுகாப்பாக வைத்திருக்கப்படும்?

உங்கள் சிகிச்சையில் சம்பந்தப்பட்ட மருத்துவர்களும் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களும் மட்டுமே உங்களது NEHR பதிவேட்டைப் பார்க்கமுடியும். மருத்துவர்களும் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களும் உங்களது NEHR பதிவேட்டை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் அவ்விவரம் பதிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் பரிசீலிக்கப்படும்.

உங்களது மருத்துவ விவரங்களை இரகசியமாக வைத்திருக்க அனைத்து சுகாதாரப் பராமரிப்பு வல்லுநர்களும் சட்டப்படியும் நிபுணத்துவ நெறிகளின்படியும் கட்டுப்படுத்தப் படுகிறார்கள். மின்னியல் மருத்துவப் பதிவேடுகளை அதிகாரமின்றி பார்ப்பது கணினி துஷ்பிரயோகச் சட்டம் அத்தியாயம் 50A பிரிவு 3(1)ன்கீழ் குற்றமாகும். இச்சட்டத்தின்கீழ், சுகாதாரப் பராமரிப்பு கழகங்கள் "கணினி பாதுகாப்புள்ள" அமைப்புகளாகக் கருதப்படுகின்றன. சட்டத்தின் பிரிவு 9ன்கீழ் உள்ள குற்றங்களுக்கான மேம்படுத்தப்பட்ட தண்டனையாக, உங்கள் விவரத்தை அதிகாரமின்றி பார்க்கும் குற்றத்திற்கு $100,000க்கு மேற்போகாத அபராதம் மற்றும் / அல்லது 20 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

## மேல்விவரங்களுக்கு

அரசாங்கத்தின் "ஒரு நோயாளிக்கு, ஒரு பதிவேடு" கொள்கைக்கு ஏற்ப, புதிய செயல்முறையின் நன்மைகளை அனுபவிப்பதற்கு நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை. மேம்பட்ட சிகிச்சை அளிப்பு நடைமுறைகள், குறைக்கப்பட்ட காத்திருக்கும் நேரம், நோயாளியின் உடல்நிலைக்கு மிகவும் பொருத்தமான சூழலை உறுதிப்படுத்தி சுகாதாரப் பராமரிப்பின் தரத்தையும் செலவையும் மேலும் சிறந்த முறையில் நிர்வகிப்பது ஆகியவை நன்மைகளில் அடங்கும்.

இருப்பினும், நீங்கள் NEHR முறையிலிருந்து விலகிக்கொள்ள விரும்பினால், அன்புகூர்ந்து எங்களது சுகாதாரப் பராமரிப்பு சேவையாளர்களில் யாரேனும் ஒருவருடன் பேசுங்கள். எங்கள் ஆலோசகர்களை நீங்கள் சந்தித்துப் பேச அவர்கள் உங்களுக்காக ஏற்பாடு செய்து தருவார்கள். NEHR முறை மற்றும் விலகிக்கொள்ளும் முறை ஆகியவைப் பற்றி அவர்களால் உங்களுக்கு மேல்விவரம் தரமுடியும். நீங்கள் NEHR பதிவேட்டு முறையில் இடம்பெறாவிட்டால், அதன் நன்மைகளை அனுபவிக்கமுடியாது என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியம்.

---

சுகாதாரப் பராமரிப்புக் கழகங்கள் வருங்காலத் தலைமுறை மருத்துவர்களுக்கும், தாதிகளுக்கும், மற்ற சுகாதாரப் பராமரிப்புத்துறை வல்லுநர்களுக்கும் பயிற்சி வழங்குகின்றன. எனவே, பயிற்சி நோக்கங்களுக்காக மருத்துவப் பதிவேடுகளைப் பார்வையிடவேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆனால் இந்தப் பதிவேடுகளைப் பார்வையிடுவோர் யாரிடமும் விவரங்களை வெளியிடக்கூடாது எனும் சட்டபூர்வ கட்டுப்பாட்டின்கீழ் இடம்பெறுகிறார்கள். நோயாளியின் தனிப்பட்ட இரகசியத்தன்மை மருத்துவப் பயிற்சியிலும் மதிக்கப்படுகிறது.

MINISTRY OF HEALTH
SINGAPORE

# REKOD KESIHATAN ELEKTRONIK NEGARA (NEHR)

Sejak 2004, beberapa buah institusi penjagaan kesihatan awam telah menggunakan Pertukaran Rekod Perubatan Elektronik (EMRX) untuk memeriksa rekod perubatan pesakit daripada beberapa buah institusi penjagaan kesihatan.

Pada 2009, Pemerintah telah mengumumkan bahawa Rekod Kesihatan Elektronik Negara (NEHR), sebuah sistem rekod penjagaan kesihatan bersepadu yang berpusat kepada seseorang individu, akan dibangunkan untuk membolehkan pertukaran maklumat perubatan mengenai pesakit di antara institusi penjagaan kesihatan yang berlainan.

Matlamat sistem tersebut ialah supaya para pesakit menikmati pengalaman penjagaan kesihatan yang lancar, mutu penjagaan yang lebih tinggi, mengurangkan melakukan ujian yang sama atau yang tidak perlu, mengurangkan kesilapan perubatan dan kejadian ubat yang tidak serasi.

Pada Jun 2012, semua institusi penjagaan kesihatan awam, hospital masyarakat yang terpilih dan doktor umum yang terpilih akan menyertai sistem NEHR.

